LANDSRÅDET FOR EELAM TAMILER
நோர்வே ஈழத்தமிழர் அவை
NORWEGIAN COUNCIL OF EELAM TAMILS

**For immediate release**
15 February, 2010

ஊடக அறிக்கை
# MEDIA RELEASE

## நாடு கடந்த தமிழீழ அரசாங்க (நா.க.த.அ) உருவாக்கம் குறித்த மதியுரைக் குழுவின் அறிக்கை தொடர்பான நோர்வே ஈழத்தமிழர் அவையின் திருத்த முன்மொழிவுகள்

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உருவாக்கத்திற்கான வழிகாட்டிக்கோட்பாடுகள் தொடர்பான முன்மொழிவுகளுடன், ஒரு மதியுரைக்குழுவின் அறிக்கை, சனவரி 15ம் நாளன்று நா.க.த.அ உருவாக்கக்குழுவின் இணைப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு விசுவநாதன் உருத்திரகுமாரன் அவர்களால் வெளியிடப்பட்டு, உலகெங்கும் வாழ் தமிழர் மத்தியில், குறித்த அறிக்கை தொடர்பான கருத்துக்கள் கோரப்பட்டிருந்தது.

இது தொடர்பாக நோர்வே ஈழத்தமிழர் அவை தனது அமர்வு ஒன்றில் விவாதித்து அதன்பின்னர் தொகுக்கப்பட்ட கருத்துக்களை திரு. உருத்திரகுமாரன் அவர்களுக்கு அனுப்பிவைப்பதோடு உள்ளடக்கத்தின் வெளிப்படைத்தன்மை கருதி ஒரு பத்திரிகை அறிக்கை வாயிலாகவும் குறித்த கருத்துக்களை தமிழ்கூறு நல்லுலகுக்கு இத்தால் முன்வைக்கிறோம்.

நா.க.த.அ உருவாக்கம் குறித்த மதியுரைக்குழுவின் அறிக்கையில் காணப்படுகின்ற விவாதத்திற்குரிய விடயங்கள் குறித்த எமது அவதானிப்புகளையும் அவைகுறித்த எமது பரிந்துரைகளையும் இங்கு முன்வைக்கிறோம்.

ஆக்கபூர்வமான கருத்துக்களாக அமையவேண்டும் என்ற தேவை கருதி எமக்கு முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் அனைத்திலுமிருந்து முக்கியமானவற்றை மாத்திரமே இங்கு தொகுத்துள்ளோம்.

வழிகாட்டிக் கோட்பாடுகளை வகுத்தன் மூலம் காத்திரமான கருத்துப் பகிர்வுக்கு மதியுரைக்குழுவின் அறிக்கை ஒரு அடித்தளத்தை இட்டிருக்கிறது.

குறைபாடுகளும் சிபாரிசுகளுமே இங்கு அவசிய தேவை கருதி விபரிக்கப்பட்டாலும் நல்ல கருத்துக்களும் சிந்தனைகளும் மதியுரைக்குழுவின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

**Norwegian Council of Eelam Tamils**
Postboks 15 Furuset, 1001 Oslo, Norway
Reg. No. 994 389 092

சில பிரதிநிதிகளின் கருத்துக்கள் தனிப்பட்ட கருத்துக்களாகவும் மேற்கோட்குறியீட்டுக்குள்ளும் பின்னிணைப்பாகவும் தரப்படுகின்றன.

## 1.0 ஆதிக்கவலுச்சக்திகள் தொடர்பான நிலைப்பாடு

'உலகின் ஆதிக்க வலுச்சக்திகளின் நிகழ்ச்சிநிரலுக்குள் ஈழத்தமிழர்களின் நலன்களைக் கொண்டுசெல்வதற்கும் அதன்பொருட்டு இயக்கவியல் செயற்படுதன்மை நிறைந்த செயற்படுதளத்தினைக் கட்டியமைப்பதற்கும்' நாடு கடந்த அரசாங்கம் செயற்படும் என்று குறிப்பிடப்படுகிறது (6.1, பக். 12, தமிழ் அறிக்கை). இந்த விடயம் குறித்த அறிக்கையின் ஆங்கில வடிவில் குறிப்பிடப்படவே இல்லை. இதுபோன்ற நுட்பமான மொழிபெயர்ப்புச் சிக்கல்களால் நாம் இயன்றவரை ஆங்கில வடிவையே மூலமாக எடுத்தாளவேண்டியிருக்கிறது.

இதேவேளை, "The TGTE should not make any statements or take any steps that may make its engagement with the international community difficult," என்று பகுதி 6.3 இல் தெரிவிக்கப்படுகிறது (இது தமிழில் சிறிது வித்தியாசமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது). இருப்பினும், குறித்த நிலைப்பாடு ஒரு மக்கள் போராட்டச் சக்தியின் தலைமைக்குரிய எழுத்துமூலமான கொள்கை நிலைப்பாடாக அமைவது எந்தவகையில் பொருத்தமுடையது என்பது கேள்விக்குரியது.

போர் நடக்கும் போது ஐ.நா. சபையின் பிரதிநிதியாக கொழும்பில் இருந்த கோர்டன் வைஸ் என்பவர், தற்போது, பல மாதங்களுப்பின்னால், 40 ஆயிரம் வரையான பொதுமக்கள் இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்டிருப்பதற்கான சாத்தியத்திற்கான ஆதராங்கள் தம்மிடம் இருந்ததாகக் கருத்துவெளியிடடிருக்கிறார். அது மட்டுமன்றி, ஐ.நா.வின் மனித உரிமைக் குழுவின் ஈழத்தமிழர் குறித்த பாராமுகத்தன்மையை பாலஸ்தீனத்தின் காசா குறித்து எடுத்த நிலைப்பாட்டோடு ஒப்பிட்டு, தலைகுனியவேண்டிய செயல் (disgrace) என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா சபையின் இப் போக்கை தமிழ்த்தேசிய அரசியற் தலைமையும் ஊடகங்களும் யுத்தகாலத்திலேயே விமர்சிக்கத் தயங்கவில்லை. போர்க்குற்றங்களுக்கு ஐ.நா. துணைபோகிறது என்று குறிப்பிடுமளவிற்கு விமர்சனம் அமைந்திருந்தது. அவ்வாறு விமர்சித்தமையானது எமது போராட்டத்திற்குரிய தார்மீக மேல் நிலையை (moral high ground) எடுத்தியம்பியது. இதற்கு ஐ.நா. சபையை கண்காணித்துக்கொண்டிருந்த தார்மீக நிலையில் நின்ற ஒரு மாற்று ஊடகமான Inner City Press முன்னுதாரணமாகச் செயற்பட்டது தமிழர்களால் என்றுமே மறக்கமுடியாதது. இவ்வாறான செயற்பாடுகளூடான விமர்சனத்தை உரிய காலத்திலேயே நாம் முன்வைத்தபடியால் தான் இன்று கூட அவர்களே அதை ஒத்துக்கொள்ளும் போது எமது தார்மீக நியாயம் மேலும் வலுப்படுகின்றது. எனவே, விமர்சிக்கும் ஜனநாயக அரசியல் மரபை நாமாக கைவிடுவது போராட்ட அரசியலுக்கு முரணானது. இது மேலைத்தேய ஜனநாயக அரசியற் பண்பாட்டிற்கு விரோதமானதும் அல்ல.

சுருங்கக்கூறின், ஆதிக்க வலுச்சக்திகளின் அனுசரணையில் தங்கியிருக்கவேண்டும் என்ற நோக்கில் நாடு கடந்த அரசாங்கம் அமைவது என்ற கோட்பாட்டுரீதியான நிலைப்பாடு ஆழமான விமர்சனத்திற்குரியது.

**பரிந்துரைகள்:**

1.1 தமிழ்த் தேசிய நிலைப்பாட்டின் தார்மீக மேல் நிலையை பாதிக்கக்கூடிய வெளிப்பாடுகளை மதியுரைக்குழு தனது இறுதி அறிக்கையில் இருந்து அகற்றுதல்.

1.2 ஆங்கிலம், தமிழ் வடிவங்களுக்கிடையே கருத்துரீதியான வேறுபாடுகளை அகற்றி நம்பகமான மொழிபெயர்ப்பை மக்களுக்கு வழங்குவதை உறுதி செய்தல். இது

**Norwegian Council of Eelam Tamils**
Postboks 15 Furuset, 1001 Oslo, Norway
Reg. No. 994 389 092

சிரமமான வேலையெனினும் தமிழ்மொழியில் கருத்துக்கள் ஆங்கில மூலத்தோடு ஒப்புநோக்கப்பட்டு அமைவது முக்கியமானது.

1.3 **ஆதிக்க வலுச் சக்திகளுடனான இணைவுத் தன்மை** குறித்து நாடு கடந்த அரசாங்கம் மேற்கொள்ளுகின்ற நிலைப்பாடுகள் ஈழத்தமிழர் சமுதாயத்துக்கும் தமிழகத் தமிழர் சமுதாயத்துக்குமிடையே முரண் நிலைகளைத் தோற்றுவிக்காத வகையில் அமையவேண்டும். கடந்த ஒரு சில வருடங்களில் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்ற ஒன்றிணைந்த உலகத் தமிழர் சமூகத்தின் ஒருமுகப்பட்ட தமிழீழ விடுதலைக்கான தார்மீக நிலைப்பாடு பேணப்படுவது எமது தமிழர்களின் பூகோள அரசியற் பலத்துக்கான (Tamil geopolitics) அடிப்படையாகும்.

1.4 தமிழர்களின் ஒன்றிணைந்த பூகோள அரசியல் நடைமுறையை (geo poliltical de-facto situation) உருவாக்குவதென்பது எமக்கிருந்த நடைமுறை அரசு (de-facto state) அழிக்கப்பட்ட பின் அதற்கான தற்காலிக அரசியல் மாற்றீடாகிறது. இதற்கு உலகெங்கும் வாழ் தமிழர்கள் ஒன்றிணைந்து நிற்பது முக்கியமானது. தாயகத்தில் நிலப்பரப்புக்களை இழந்து உலகத்தமிழர்களின் மனங்கள் வெல்லப்பட்டுள்ள சூழலைப் பாதுகாத்து அடுத்த கட்ட நடவடிக்கைகள் அமையவேண்டும்.

1.5 போராட்டத் தலைமைக்கு இசைந்துபோகும், ஈடாடும், தோல்விமனநிலையில் இருக்கும் களைத்துப்போன பழைய தலைமுறையிடமிருந்து தமிழீழத் தாயகத்தினதும் தமிழகத்தினதும் இளைய தலைமுறையின் ஒன்றிணைந்த ஆற்றலோடும் புலம்பெயர் தமிழரின் இரண்டாம் தலைமுறையின் ஆக்கபூர்வமான பங்கெடுப்போடும் புதிய தலைமை உருவாவதற்கான தளங்களாக நாடளாவிய மக்களவைகளும், நாடு கடந்த அரசாங்கமும் அமைய வேண்டும். பழைய தலைமுறை ஆலோசனை மட்டத்தில் இருப்பதே நல்லது. புதிய தலைமுறையே தலைமைப் பொறுப்புக்களை வகிப்பது பொருத்தமானது. இது குறித்த பிரக்ஞை மிகவும் முக்கியமானது.

## 2.0 செயற்படுதளம்: நாடுதழுவிய மக்களவைகளுடனான இணைவுத்தன்மை

"ஈழத்தமிழ்ச்சமூகத்தின் தேசிய அரசியல் வேட்கைகளின் வழிநின்று சவால்களினை வென்றெடுப்பதற்காக சமூகத்தினை வழிநடத்துவதற்கும் பல்வேறு தளங்களிலும் பலபரிமாணங்களிலும் செயற்படும் நிறுவனங்களினை ஒருங்கிணைப்பதற்கும் **தேசியமட்டங்களிலும் சர்வதேசமட்டத்திலும்** செயற்படக்கூடிய **அதியுயர்** நிறுவனம் **ஒன்றின்** தேவை உணரப்பட்டுள்ளது," என்று மதியுரைக்குழுவின் அறிக்கை பகுதி 6.2 இல் குறிப்பிடுகிறது. அதேவேளை, இந்த அறிக்கையானது தேசிய மட்டங்களில் மக்களால் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்டு எமது அவையைப் போல ஏற்கனவே இயங்கிவருகின்ற, விரைவில் ஏனைய நாடுகளிலும் இயங்கப்போகின்ற மக்களவைகளுக்கும் நா.க.த.அ வுக்கும் இடையேயான கட்டமைப்புரீதியான இணைவுத்தன்மை குறித்து எதையும் பரிந்துரைக்கவில்லை என்பதும் கவலைக்குரியது.

மாறாக, தேசிய அளவில் மக்களவை அமைக்கப்படும் சனநாயகச் செயற்பாடு குறித்து, அதே பத்தியில்: "அத்தகைய **சனநாயகப் பயிற்சிகள்** வரவேற்கப்பட வேண்டியவை. எனினும் அத்தகைய முயற்சிகளுக்கு **நேரடியாக ஆதரவினையோ எதிர்ப்பினையோ நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் சார்பாக** வழங்க முடியாதுள்ளது." என்று குறிப்பிடப்படுவதும் ஒரு கவலைக்குரிய நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

வரிகளுக்கிடையில் எடுத்தாளப்படும் கருத்தாக, இரண்டு தளங்களிலும் (நாடளாவிய, நாடு கடந்த) செயற்படுகின்ற **'அதியுயர்', 'ஒருமை'** நிறுவனமாக நா.க.த.அ அமைக்கப்படவேண்டும் என்பதையே மதியுரைக்குழுவின் அறிக்கை முன்வைக்க முனைகிறது.

நாடு கடந்த அரசாங்கம் என்ற மக்கள் கட்டமைப்பு சரியான முறையில் அமையவேண்டுமானால், அது மக்கள் மத்தியில் ஆழ வேரூன்றியிருக்க வேண்டும் என்பதே ஈழத்தமிழர் அவையின் நிலைப்பாடு.

அவ்வாறு ஆழ வேரூன்றுவதற்கு, தேசிய (Country Council) மட்டங்களும் குறித்த ஒவ்வொரு நாட்டுக்குள்ளான பிரதேச மட்டங்களும் முக்கியமானவை. இதை **சமூக ஆதார மட்டம்** (grass root level) என்றும் குறிப்பிடலாம். இதற்கு அப்பால் பூகோளரீதியான பிராந்திய மட்டங்களும் (regional level: such as Scandinavian, European etc.) முக்கியமானவை.

சமூக ஆதார மட்டத்தில் சரியான முறையில் பற்றுக்கோடாக இறுகப்பற்றியிருக்கும் தன்மை இல்லாதுவிடின் நாடுகடந்த அரசாங்கம் தவறான வழிநடத்தலுக்கும், பலவீனப்படுத் தலுக்கும் உள்ளாக்கப்படும் தறுவாயில் அதை சரியான வழிப்படுத்த முடியாத நிலை உருவாகிவிடும் ஆபத்தும் உண்டு.

எனவே, கட்டமைப்பு ரீதியாக சமூக ஆதார மட்டத்திற்கும் நாடுகடந்த அரசு என்ற நாடு கடந்த மட்டத்திற்கும் இடையேயான இடைக் கொழுக்கி (inter-locking mechanism) **யாப்புரீதியாகவும், கட்டமைப்பு ரீதியாகவும்** இருப்பது அவசியமாகிறது.

"ஏற்கனவே மக்கள் பேரவைக்காகத் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் நோர்வேயில் உள்ளபடியால் அவர்களை உள்ளடக்கிய ஒரு கட்டமைப்பே இங்கு ஒரு நல்ல தீர்வாக அமையும் என்பது எனது கருத்து," என்று ஒரு நோர்வே ஈழத்தமிழர் அவைப் பிரதிநிதி குறிப்பிடுகிறார். "என்னைப் பொறுத்தவரையில் இன்னுமொரு தேர்தல் நோர்வேயில் அவசியமற்ற ஒரு விடயமாகும். NCET பிரதிநிதிகளையே நா.க.த.அ ற்கு முன்மொழியலாம்," என்கிறார் அவர். அத்தோடு "புலம்பெயர் நாடுகளில் மக்கள்

பேரவைத்தேர்தல்கள் முடிந்த பின் நா.க.தஅ தேர்தலை நடாத்துவதே சாலச்சிறந்தது," என்றும் அவர் தெரிவிக்கிறார்.

"நா.க.த.அ பிரதிநிதிகள் நோர்வேயில் செயற்படும்போது மக்களவை பிரதிநிதிகளுடன் இணைந்து வேலை செய்வார்களா? இதில் நடைமுறைச்சிக்கல்களை தேர்தலின் பின்பு ஏற்படுத்துவார்களா? அரசியல்ரீதியிலான முன்னெடுப்புக்களில் புரிந்துணர்வும் ஒற்றுமைத்தன்மையும் மிகமக்கியமான ஒரு விடயமாகும். நோர்வே அரசுடனோ அல்லது அரசியல்வாதிகளுடனோ ஏற்படுத்தும் தொடர்புகள் இங்குள்ள கட்டமைப்புக்களால் (NCET) மேற்கொள்வதே சாலப்பொருந்தும்," என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

**பரிந்துரைகள்:**

2.1 மக்களவைகளுக்கும் நாடு கடந்த அரசுக்கும் இடையேயான கட்டமைப்பு ரீதியான ஒருங்கிணைவுத் தன்மை அவசியமாகிறது. தேசிய மட்டங்களில் நாடு கடந்த அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தும் வேலை அவ்வந்நாட்டில் அமையும் மக்களவைகளுக்கு உரியதாகவும் அம்மக்களவைகளோடு நாடு கடந்த அரசாங்கம் எவ்வகையில் தனது உறவைப் பேணலாம் என்பது குறித்ததுமான பரிந்துரைகள் இறுதியான ஆலோசனைக்குழுவின் திருத்தப்பட்ட அறிக்கையில் தேவை.

2.2 தேசிய மட்டங்களிலான மக்களவைகளுக்கும் நா.க.த.அ வுக்கும் இடையேயான இடைக்கொழுக்கித் தன்மை அவசியம். ஒருமைத்தன்மை (monolithic) அற்றதாக கட்டமைப்பு அமைக்கப்படுவதே நல்லது. உதாரணமாக, சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்படும் போது அவை குறித்த அளவு பெரும்பான்மையான நாடளாவிய மக்களவைகளின் ஜனநாயக ரீதியான அங்கீகாரம் (ratification) பெறவேண்டும் என்பது போன்றதாக அமையலாம். அல்லது, சம்ஸ்டி முறையில் தேசிய மட்டங்களை ஒருங்கிணைக்கும் ஒரு சமஸ்டி அரசாங்கம் போல நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் அமையலாம். இதைவிடவும், ஐரோப்பிய சமுகம் (EU) போல தலைமைத்துவம் (presidency) சுழற்சிமுறையில் ஒவ்வொரு நாட்டுக்கும் கையளிக்கப்படுவது போலவும் அமையலாம். இதற்கான பல வடிவங்களும் பரிமாணங்களும் உண்டு. இது குறித்த முறையான கருத்துப்பரிமாற்றங்கள் செய்யப்பட்டு ஒரு சிறந்த கட்டமைப்புக்கான வடிவமைப்பு மேற்கொள்ளப்படுவது நாடு கடந்த அரசாங்கம் என்ற கோட்பாட்டை மேலும் வலுப்படுத்துவதோடு ஒற்றுமையையும் ஈழத்தமிழர் மத்தியில் வலுப்பட்டு பல நாடுகளிலும் எம்மவர் மத்தியில் திறமையுருவாக்கம் ஏற்படவும் வழிவகுக்கும்.

2.3 பிராந்திய மட்டங்களில் எவ்வாறு திறம்பட இயங்கலாம் என்பதற்கான கட்டமைப்புகளுக்கான பரிந்துரைகளும் தேவை. இவ்வாறான கட்டமைப்புக்கள் நாடு கடந்த அரசாங்கத்தின் செயற்பாடு உலகின் எல்லா முனைகளிலும் இடம்பெறுவதை உறுதிப்படுத்துவதோடு, உலகக் கட்டமைப்புக்களோடு அந்தந்தப் பிராந்திய மட்டத்தில் எமது செயற்பாடுகள் அமைவதற்கும் வழிவகுக்கும். ஆபிரிக்கா, ஆசியா, மத்தியகிழக்கு, தூரகிழக்கு, தென் அமெரிக்கா போன்ற இடங்கள் எமது அரசியல் வேலைகளில் முக்கியத்துவம் பெறுவதை நாம் உறுதிசெய்யவேண்டும். அதிக அளவிலான பிரதிநிதிகள் இடம்பெறும் நாடுகடந்த அரசாங்கத்தை உருவாக்கம் செய்வதற்குப் பதிலாக பிராந்திய மட்டங்களில் நாடுகடந்த கோட்பாட்டை வலுப்படுத்தி, அதற்கும் மேலான ஒரு உலகளாவிய மட்டத்தை கொண்டுவருவதுகூட பொருத்தமானதாக அமையலாம்.

2.4 நா.க.த.அ மதியுரைஞர் குழுவுடன் ஒரு நேரடிச் சந்திப்பை நோர்வே ஈழத்தமிழர் அவை ஏற்படுத்த வேண்டும். இச்சந்திப்பானது மக்கள் முன்னிலையில் ஒரு திறந்த கருந்தரங்காக (கருத்தாடலாக) அமைவது நல்லது.

**Norwegian Council of Eelam Tamils**
Postboks 15 Furuset, 1001 Oslo, Norway
Reg. No. 994 389 092

## 3.0 படிமுறை அணுகுமுறை குறித்த விவாதம்

சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழத் தனியரசுக்கான விசுவாசத்தை வெளிப்படுத்தவேண்டும் என்பதோடு நின்றுவிடும் வழிகாட்டிக்கோட்பாடு, இலக்குக்கான மக்களாணை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. அதை சுயநிர்ணய உரிமை என்பதாக மட்டும் வெளிப்படுத்த முயல்கிறது.

அது மட்டுமன்றி தமிழ் இறைமையை சரணாகதியாக்காமல் 60 வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கூர்ப்புரீதியாக எத்தனையோ படிகளைத் தாண்டி வந்த நிலையில், ஒரு பாரிய இன அழிப்புப் போரின் உச்சக்கட்டத்தைத் தாண்டிய நிலையில் மீண்டும் முதற்படி, அடுத்தபடி என்று ஒரு படிமுறை அணுகுமுறை பற்றி கொள்கை வகுப்பது குறைந்த பட்சத் தீர்வுகளை நாம் அங்கீகரிப்பது போலாகிவிடும்.

30 வருட சாத்வீக போராட்டமும் 30 வருட ஆயுதப் போராட்டத்தையும் மறந்து விட்டு நாம் படி நிலை அரசியல் பேச முடியாது. 60 வருட போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியாக தமிழ் ஈழத்தை உருவாக்குவதற்கே நாடு கடந்த தமிழ் ஈழ அரசு உருவாககப்படுகிறது என்பதைத் தெளிவாக்கவேண்டும்.

**பரிந்துரைகள்:**

3.1 படிமுறை அணுகுமுறை என்று குறிப்பிடுவதை முழுமையாகத் தவிர்த்தல்.

3.2 சர்வதேச சமுகமோ, பிராந்திய சக்தியோ ஈழத்தமிழர்களின் தேசிய இனப்பிரச்சனை என்று ஒன்றுள்ளது என்பதை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் தேசிய இனப்பிரச்சனைகள் அணுகப்படவேண்டிய வழிமுறைகளின்பாற்பட்டு ஒரு நியாயமான தீர்வுத்திட்டத்திற்கான மாதிரியை முன்வைக்க முயலும் தருணத்தில் அவர்களோடு கலந்துரையாட நாம் எப்போதும் தயாராயிருப்போம் என்பதைத் தெளிவுபடுத்தலாம். அதாவது, எமது மக்களாணை கொண்ட அபிலாசையையோ, தமிழ் இறைமையையோ எந்தவிதத்திலும் பாதிக்காது நாம் எவரோடும் கலந்துரையாடத் தயாராய் இருப்போம் என்ற நிலைப்பாட்டைக் கைக்கொள்ளல்.

3.3 முப்பது வருட கால சாத்வீகப்போரிலும் பின்னரான ஆயுதப்போராட்டகாலத்திலும் தமிழர் தரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு எவ்வாறு முக்கியத்துவம் கொடுத்தது என்பதும், எவ்வகையில் இப் பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட இணக்கங்கள் (சுனாமி ஒப்பந்தம் உள்ளடங்கலாக) புறக்கணிக்கபட்டன என்பதும் வலியுறுத்தப்படுவது நல்லது. சர்வதேச சமுகம் மேற்கொண்ட தவறான அணுகுமுறைகளையும் தவறாது உரிய முறையில் சுட்டிக்காட்டி, சரியான முறையில் அணுகுமுறையை வகுக்கவேண்டும் என்பதை வேண்டுவதே பொருத்தமானதாகும்.

## 4.0 ஈழத் தமிழ்த் தேசிய அடிப்படைகளின் வரைவிலக்கணங்களைத் தெளிவுறுத்தல்

தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை வரைவிலக்கணங்களை தமிழீழ மக்களால் ஜனநாயக ரீதியாக மக்களாணை பெற்று, நோர்வே வாழ் ஈழத்தமிழர்களால் மீளுறுதி செய்யப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்திலிருந்தே நோர்வே ஈழத்தமிழர் அவை வரித்துக்கொண்டுள்ளது (ஈழத்தமிழர் அவையின் ஒரு பிரதிநிதி எமது அவையின் யாப்பிலிருந்து சில பகுதிகளை ஒப்பிட்டுத் தனது கருத்தை வெளியிட்டார். இது பின்னிணைப்பு-1 இல் தரப்பட்டுள்ளது).

எமது தேசிய இலக்குக் குறித்து தமிழீழ மக்கள் ஜனநாயக ரீதியாக 33 வருடங்களுக்கு முன்னரே தமது பூரண சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி தெளிவான முடிவொன்றை வகுத்துள்ளார்கள். சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழத் தனியரசு என்பதற்கே மக்களாணை வழங்கப்பட்டுள்ளது. அதை இன்று பல புலம் பெயர் நாடுகளில் எமது மக்கள் மீளுறுதிப் படுத்தியுள்ளார்கள். இந்தச் செயற்பாடானது நாடு கடந்த அரசியலின் அடிப்படை.

சுருங்கக்கூறின் நாடு கடந்த அரசாங்கத்திற்கான முதற்கட்டச் செயற்பாடு கடந்த வருடம் மே மாதம் 10ம் நாள் நோர்வேயில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கான மீளுறுதிப்படுத்தலை முழுமையான ஜனநாயக முறையில் செய்த பொழுதே ஆரம்பமாகிவிட்டது.

இந்த அடிப்படைகள் அறிக்கையில் சரியான முறையில் அங்கீகரிக்கப்படாதமை மிகுந்த கவலைக்குரியது. தமிழ்த் தேசிய இனம் என்பதன் வரையறை என்ன, பூரணமான சுயநிர்ணய உரிமை எந்த வகையில் அவர்களுக்கு உண்டு, தமிழ்த் தேசிய இனம் குறித்த பரந்துபட்ட வரைவிலக்கணத்துக்கு உபபிரிவான ஒரு மக்கள் குழுவுக்கு (community) சுயநிர்ணய உரிமை இருக்கிறதென்றால், அது எந்த வகையானது, அது எந்தவிதமான அடிப்படைகளில் சொல்லப்படுகிறது என்பது போன்ற விடயங்கள் வரைவிலக்கண ரீதியாகத் தெளிவுபடுத்தப் படவேண்டும்.

நோர்வே ஈழத்தமிழர் அவையைப் பொறுத்தவரை, அதன் யாப்பின் அடிப்படையிலான தமிழ்த்தேசியம் தொடர்பான வரைவிலக்கணங்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் இருந்து பெறப்பட்டவை என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

“1976 இன் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டதும், 1977ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ் மக்களால் ஒருமனதாக வாக்களித்து ஆணைப்படுத்தப்பட்டதும், பின்பு 1985ல் திம்புப் பிரகடனத்தில் வெளிப்படுத்தப் பட்டதுமான தமிழர் ஓர் தேசிய இனம், வடக்கு- கிழக்கு தமிழர் தாயகநிலம், ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமை போன்ற அடிப்படைக் கோட்பாடுகளை ஈழத்தமிழரின் அரசியல் அபிலாசைகளின் ஆதார சுருதியாக ஏற்றுக் கொள்ளும் அனைத்துத் தமிழ் மக்களையும் ஒன்றிணைப்பது,” என்று மதியுரைக்குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது.

இங்கு பிரிந்து சென்று தனித்தமிழீழ அரசு அமைப்பதற்கான பதம் பயன்படுத்தப்பட வேண்டும். திம்புக்கோட்பாடு சேர்க்கப்படவேண்டிய அவசியம் இல்லை என்பதான கருத்துக்கள் ஈழத்தமிழர் அவையின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டுள்ளன.

முஸ்லீம்களுக்கு சுயநிர்ணய உரிமை எந்த அடிப்படையில் குறிப்பிடப்படுகிறது என்ற கேள்வியும், அவர்களையும் மதித்து உள்வாங்கும் வகையில் அவர்களுக்கான உள்ளகசுயநிர்ணய உரிமைபற்றிச் சிந்திக்கலாம் என்ற கருத்தும் சில பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டுள்ளன.

“நாடுகடந்த அரசானது தேர்தல் நடத்தப்படும் முன்பு மாதிரி வடிவிலான யாப்பு ஒன்றை

வெளியிடவேண்டும்," என்ற கருத்தும் சில பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டுள்ளது.

"யாப்பை மீறிச் செயற்படுவோர் நா.க.த.அ இன் உறுப்புரிமையில் இருந்து விலக்கப்படுவதற்கான சரத்தும் வழிகாட்டிக்கோட்பாட்டில் இருக்கவேண்டும்," என்ற கருத்தையும் ஒரு பிரதிநிதி முன்வைத்துள்ளார்.

**பரிந்துரைகள்:**

4.1 ஈழத் தமிழ்த் தேசிய இனத்திற்கான வரைவிலக்கணத்தைத் தெளிவாக வரையறுத்தல்.

4.2 சுதந்திரமும் இறைமையுமுள்ள தமிழீழத் தனியரசு என்பதே ஜனநாயக மக்களாணை பெற்ற எமது தீர்வுக்கான அபிலாசை என்பதை வரையறுத்தல். இதற்காகவே அளப்பரிய அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டு பாரிய இழப்புக்களைச் சந்தித்து எமது தேசிய இனம் தனது விடுதலைப் பயணத்தை மேற்கொண்டுவந்துள்ளது என்பதையும் தெளிவுபட எடுத்தியம்பல்.

4.3 இன அழிப்பின் (genocide) 60 வருடத்திற்கு மேற்பட்ட வரலாறும், ஆழமான பரிமாணங்களும் சொல்லப்பட்டு, இன அழிப்பின் உச்சத்தில் இன்று நாம் நிற்பதைச் சுட்டிக்காட்டி, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாரிய இன மேலாதிக்கமும் படிமுறையிலான சிங்களமயமாக்கலும் தமிழ் இன அழிப்பும் குறித்த தமிழ்த் தேசிய இனத்தின் பயம் எடுத்துக்காட்டப்படுவது அவசியம். தமிழ் இன அழிப்பு என்று நாம் எதை வரைவிலக்கணம் செய்கிறோம் என்பதை தெளிவுபடுத்தவேண்டும்.

4.4 சுயநிர்ணய உரிமை எந்தவகையில் தமிழ்த் தேசிய இனத்திற்கு (பாரம்பரியத் தாயகம், தனித்துவமான தேசியம்) ஒரு உளதான உரிமையாக (inalienable right) இருக்கிறது என்பதை வரையறை செய்தல். எமது தேசிய இனத்தின் வரையறைக்குட்படுகின்ற மக்கள் குழுமங்களுக்கான சிறப்புரிமைகளுக்கான தேவைகளையும் கோட்பாட்டு ரீதியான வரைவிலக்கண அடிப்படையில் தெளிவுபடுத்தல்.

4.5 தமிழ்த் தேசிய இனத்தைப் பொறுத்தவரை 'உள்ளக சுயநிர்ணய உரிமைக்கான' பரிணாமப் படிமுறைக் காலம் 1977 தமிழீழத்திற்கான மக்களாணையுடன் எழுத்துமூலமாக முற்றுப்பெற்றாலும், 2009 இன அழிப்பு ஆக்கிரமிப்புப் போரின் முள்ளிவாய்க்காற் சமரின் முடிவுடன், அதற்கிருந்த பரிசோதனைக் காலமும் முடிவுற்றுவிட்டதாகத் தெளிவுபட வரலாற்று ரீதியான வரைவிலக்கணரீதியாக எடுத்துக்கூறல்.

## 5.0 நடப்பியல் ரீதியான சிக்கல்களைத் தவிர்த்தல்

உருவாக்கக்குழு என்பது நியமிக்கப்பட்ட ஒருவரை மாத்திரம் கொண்டதாக மட்டுமே இருக்கிறது என்பது ஒஸ்லோவில் அண்மையில் நடத்தப்பட்ட கூட்டத்தில் திரு உருத்திரகுமாரன் அவர்களால் வெளிப்படுத்தப்பட்டது. இதற்குக் காரணம் குழுவாதப் போக்குத் தலைதூக்கியதென்பதையும் அவரே ஒப்புக்கொண்டார்.

இந்த நிலையில் குழுவாதப் போக்கு (sectarian politics) இல்லாமல் ஒற்றுமையைக் கொண்டுவரவேண்டுமாயின், அடிமட்ட சமூக ஆதார நிலையில் (grass root level) இருந்து எல்லாச் செயற்பாடுகளிலும் அனைத்து தரப்புகளும் சேர்ந்து இயங்கும் நிலையைத் தோற்றுவிக்கவேண்டும். இதற்கு கொள்கைரீதியான தேசிய நிலைப்பாடு அவசியம்.

இதுவரைகாலமும் ஈழத்தமிழரின் பெரும்பான்மையினர் ஒரு புகலிடச் சமுகமாக (diaspora) ஒன்றிணைந்து இயங்கியமைக்குத் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த சக்தியின் ஒன்றிணைப்பு காரணமாயிருந்தது. இந்தச் சக்தியை குழுவாத அரசியலுக்குள் பிரித்துச் சிதைக்காமல் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு மனரீதியான தெளிவுநிலைக்குப் பக்குவப்படுத்தப்படவேண்டும். இதற்கான வேலைத் திட்டம் தேர்தல் நடாத்தப்படுவதற்கு முன்னர் அவசியமாகிறது.

இது குறித்து ஈழத்தமிழர் அவையின் உறுப்பினர் ஒருவர் எழுத்துமூலம் சமர்ப்பித்த கருத்துக்கள் வருமாறு:

“இன்றைய அரசியல் சூழ்நிலையையில் புலம்பெயர் தமிழர்கள் பல்வேறு கருத்துக்களால் பிளவு படாமிலிருப்பதே எம்மைச் சர்வதேசம் அரசியல் பிளவு படுத்தாமல் இருப்பதற்கான பலமாகும். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் முன்னெடுக்கும் நடவடிக்கையும் நாடு கடந்த தமிழீழ நடவடிக்கையும் வேறல்ல என்பதை நிலைநிறுத்த வேண்டிய இராஜதந்திர அணுகுமுறைக்கேற்ப புரிந்துணர்வுடன் விட்டுக் கொடுப்புடன் நடந்து ஒற்றுமையைப் பேணுதல் மிக மிக முக்கியமானவை யாகும்.

“ஏனெனில் இவ்விரு முன்னெடுப்பாளர்களிடம் தோற்றுவிக்கப்படும் கருத்து முரண்பாடுகள் ஏதிரிடைத் தோற்றத்தைப் பெற்று இரு வெவ்வேறு அணிகளை தோற்று வித்து புலம்பெயர் தமிழர் ஒற்றுமைகள் அணி அணியாக பிளவுபட்டு சிதறிக்கப்படும் அபாயம், வீழ்ச்சி ஆகியன தோன்றும்.

“தமிழ் இன உணர்வு, தமிழீழ உணர்வு அது சார்ந்த சுயநிர்ணய அரசியல் கொள்கை தனியரசுத் திட்டங்கள் தமிழரிடமிருந்து நிரந்தரமாகவே அழிக்கப்பட வேண்டுமென்பதில் முனைப்பாக இருக்கும் இலங்கையினதும் இந்தியாவினதும் புவியியல் சார்ந்த சர்வதேச சமுக அக்கறையினாலும் ஏற்படக்கூடிய அபாயத்தை இப்பிளவுகள் வழிவகுக்கும்.

“நாடு கடந்த தமிழீழம் வட்டுக் கோட்டைத் தீர்மான அடிப்படை ஆகியவற்றின் செயல்பாட்டுக்குள் உளவுப்பிரிவினர் (தமிழர் ஒற்றுமையை குலைக்கும்) நுழைவதற்கு எச்சந்தர்ப்பத்தையும் தமிழர்கள் கொடுக்கவே கூடாது.

“இரு பகுதினரும் வெவ்வெறல்ல ஒரு இலக்கை நோக்கி செல்லும் பாதைகளே என்பதை நாம் நன்றாகவே உணரக்கூடிய வகையில் தெளிவுபடுத்தவேண்டும். இதற்கு மக்களிடம் தெளிவுத்தன்மையை உருவாக்கவேண்டும்.

“எமது அரசியல் நகர்வு இராஜதந்திரத்துடன் இருக்க வேண்டும். எமது இராஜதந்திரம் எதிரியை அணுகவதற்கேயன்றி எமக்கெதிரானதாக இருக்கவே கூடாது.

---

“முக்கியமாக இவ்விரு செயல்பாடடு நிர்வாக உறுப்பினரிடம் ஏற்படும் கருத்து முரண்பாடுகள் ஒரு கோபமாகவோ தனிமனித ஆக்ரோசமாகவோ வெளிப்படக் கூடாது. கோபமுற்று இலங்கையரசின் உளவாளிகளுக்கு இரகசியங்களைச் சொல்லும் மிக மோசமான மனிதராக எவரும் தம்மை ஆக்கிக்கொள்ளக் கூடாது (இலங்கை அரசுடன்தொடர்புள்ளவர்களை இனங்கண்டு தவிர்ப்பது நல்லது). குழுப்பிளவுகள் என்ற நோக்கை விட்டு கோட்பாட்டு ரீதியாகச் சிந்திக்கவேண்டும்.

“மே 18 ற்குப் பிறகு, நோர்வே மக்களவை தான் புலம்பெயர் நாடுகளில் முதலாவதாக சனநாயக ரீதியில் உருவாக்கப்பட்ட கட்டமைப்பாகும். நமது செயற்பாடுகள் மிகவும் ஆக்கபூர்வமாகவும் முனைப்புடன் இருக்கவேண்டும்.”

**பரிந்துரைகள்:**

5.1 தமிழீழக் கருத்தை மீளுறுதிப்படுத்தும் வட்டுக்கோட்டைத் தீர்மான மீளுறுதிப்படுத்தல் வேலைத்திட்டத்தில் அனைவரும் சேர்ந்து பணியாற்றல்.

5.2 நாடு தழுவிய மக்களவைகளை உருவாக்குவதில் சேர்ந்து பணியாற்றல்.

5.3 நியமிக்கப்பட்ட குழுக்களாக இல்லாமல் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்களால் நாடு கடந்த தமிழீழ அரசாங்க உருவாக்கக்குழுக்களை ஒவ்வொரு நாடுகளிலும் உருவாக்குதல்.

5.4 மேற்குறித்த மூன்று வேலைத்திட்டங்களும் ஒற்றுமையுடன் செய்யப்படுவதற்கு உகந்த வகையிலான கால எல்லைகளை வகுத்தல்.

5.5 நாடுவாரியான பிரதிநிதிகளின் எண்ணிக்கையில் சரியான சமநிலை பேணப்படவில்லை என்ற கருத்தும் நிலவுகிறது. ஆகவே, ஒவ்வொரு நாட்டிலும் வசிக்கும் ஈழத்தமிழரின் தொகை குறித்த உத்தேச புள்ளிவிபரங்களையாவது வெளிப்படுத்திப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை குறிப்பிடவேண்டும்.

5.6 தேர்தலில் தெரிவாகும் பிரதிநிதிகள் ஒரு சேர ஓரிடத்தில் கூடி, முழுமையான ஜனநாயக ரீதியில் விவாதிக்கக்கூடிய சூழலை எவ்வகையில் உருவாக்கலாம் என்பது குறித்த வேலைத்திட்டமும் ஆலோசனைகளும் மிகவும் அடிப்படையானவை. தேர்தலை விரைவில் நடாத்துவதில் காட்டும் நாட்டத்தை விடவும் இந்த ஏற்பாட்டை ஒழுங்கு செய்வதிலேயே உடனடியான நடவடிக்கை அவசியம். ஏனெனில், தெரிவாகும் பிரதிநிதிகள் தொலைபேசி மூலமோ, அல்லது வேறு விதமான வகையில் ‘நியமிக்கப்பட்ட’ குழுக்கள் மூலமோ ‘நிர்வகிக்கப்படும்’ நிலைக்கு உள்ளாகாமல் சுதந்திரமான அமர்வுகளில் கருத்துப்பரிமாற்றம் செய்து, சகல விதமான வாதப் பிரதிவாதங்களையும் செவிமடுத்து, தீர்மானங்களை மேற்கொள்ளுவதற்குத் தேவையான ஜனநாயகச் சூழல் கட்டமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்படவேண்டும். அது சாத்தியமில்லையாயின் கையாளப்படக்கூடிய நிலைமைக்குத் தக்கதாக பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைக்கப்படவேண்டும். வளர்ச்சிப்போக்குக்கு ஏற்ப எதிர்வரும் காலங்களில் எண்ணிக்கையைக் கூட்டிக்கொள்ளலாம்.

5.7 வேறு சக்திகளில் தங்கியிராத வகையில் கட்டமைப்பை நடாத்துவதற்கான ‘நிதி மூலம்’ குறித்த நிலைப்பாடு தெளிவுபடுத்தப்படவேண்டும். கட்டமைப்பை நிர்வகிப்பதற்கான நிதித்தேவைக்கு வேறு சக்திகளில் தங்கியிருக்கும் நிலையில் ஒரு ஜனநாயக மக்கள் கட்டமைப்பை நடாத்துவது உகந்ததல்ல.

எனவே, இதற்கான வரையறையும் அவசியமாகிறது.

5.8 வடக்கு, கிழக்குக்கான ‘அபிவிருத்தி’ என்ற போர்வையில் சர்வதேச நிதி உதவியுடன் சிறிலங்கா அரசு செய்கின்ற தமிழ்த்தேசியத்திற்கு விரோதமான நடவடிக்கைகளை சுட்டிக்காட்டுவதோடு, ஈழத்தமிழருக்கான ‘அபிவிருத்தி’ என்பது என்ன, இதற்கான பொருத்தமான அணுகுமுறைகள் என்ன என்பது வரையறுக்கப்படவேண்டும். இது குறித்த நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டாலே சர்வதேச ரீதியான சில சிக்கல்களுக்குள் அகப்படாமல் எமது பிரதிநிதிகளும் கட்டமைப்புக்களும் இயங்குவது சாத்தியமாகும்.

5.9 பின்-நவீனத்துவ காலத்துக்குரிய (post-modern) சொல்லாடலாக மாத்திரம் நாடு-கடந்த-அரசியல் (trans-national-politics) என்பதைக் கையாண்டு, பொருளாதார-ரீதியான பல்தேசிய நிறுவனங்களின் (multi-national corporates) உதாரணங்களுக்குள் சிக்கி கருத்துமயக்கத்திற்கு உட்படுவது அறிக்கையில் ஆங்காங்கே வெளிப்படுகிறது. எமது தேசிய விடுதலைக்கான அரசியலுக்குப் பொருத்தமான நாடு-கடந்த-தன்மைகள் எவை என்பது பற்றிய புரிதலை மேலும் தெளிவாக்கும் முறையிலான தேடல் உணரப்படுகிறது.

இவ்வண்ணம்,
அரசியல் விவகாரக் குழு
நோர்வே ஈழத்தமிழர் அவை

## பின்னிணைப்பு: 1

(நோர்வே ஈழத்தமிழர் அவையின் ஒரு பிரதிநிதியின் தனிப்பட்ட ஒப்பீட்டுக் கருத்து)

**நாடு கடந்த தமிழீழ அரசு இன் தேர்தலிற்கு முன் முக்கியமாக நிறைவேற்ற வேண்டியவை:**

1) நாடு கடந்த அரசு ஒரு யாப்பினை கொண்டிருத்தல் வேண்டும் (வட்டுக்கோட்டைத்தீர்மானத்தினை ஏற்று குறைந்த பட்சம் கீழே குறிப்பிடுபற்றை ஏற்றல்)

2) வேட்பாளர் அனைவரும் 1)இல் குறிப்பிட்டுள்ள யாப்பினை முழுமையாக ஏற்க வேண்டும்.

3) நா.க.த.அ உலகளாவிள மக்கள் அவைகளுடன் ஒற்றுமையாக செயற்படுதற்குரிய நிரந்தர செயற்திட்டம் அமைத்தல்.

**மாதிரி யாப்பு** (நோர்வே ஈழத்தமிழரவையின் யாப்பிலிருந்து …)

**தாயகத்திலுள்ள ஈழத்தமிழர்களின் சுதந்திரம், இறைமை, மற்றும் மேம்பாட்டிற்காகப் பாடுபடல் :**

1977ம் ஆண்டில் இலங்கைத் தீவில் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கில் வழங்கப்பட்ட மக்கள் ஆணையின் பிரகாரம் அத்தீவில் ஈழத்தமிழர்களுக்கு ஒரு பாரம்பரியமான தாயகம் உண்டு, அவர்கள் ஒரு தனித்துவமான தேசியம், அத் தேசியத்திற்குச் சுயநிர்ணய உரிமை உண்டு என்ற அடிப்படைகளினூடாக சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசை தொடரறாத வடக்குக் கிழக்கில் அமைத்துக்கொள்வதே ஈழத்தமிழரால் மக்கள் ஆணையூடாக வெளிப்படுத்தப்பட்ட அரசியல் அபிலாசை என்பதையும், இந்த மக்களாணையின் முக்கிய அடிப்படைகளை மீளவும் உறுதிப்படுத்தும் வகையில் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு நிலப்பரப்பில் சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசு உருவாக்கப்படவேண்டும் என்று இந்த அவை தெளிவாகக் குரல் கொடுக்கும். சர்வதேச சமூகம் தமிழீழத்தை ஏற்றுக் கொண்டு அங்கீகரிப்பதற்கான வேலைகளில் ஈடுபடுவதோடு ஈழத்தமிழர்கள் தமது இறைமையைச் சரணாகதியடையச்செய்யவேண்டும் என்ற தோரணையிலான முயற்சிகளை எந்தக் கோணத்திலிருந்து யார் முன்னெடுப்பினும் அவற்றை ஜனநாயகரீதியில் எதிர்கொண்டு ஈழத்தமிழரின் இறைமைக்காக இந்த அவை உறுதியாகச் செயற்படும்.

**இலங்கைத்தீவிற்கான பின்வரும் தமிழ்த் தேசியத் திட்டத்தை (த.தே.தி) அங்கீகரித்தல்:**

1) இலங்கைத் தீவில் ஈழத்தமிழர் தனித்துவமான ஒரு தேசியம் என்பது,
2) தனித்துவமான தேசியம் என்றஅடிப்படையில் ஈழத்தமிழர் முழுமையான சுயநிர்ணய உரிமை கொண்டவர்கள் என்பது,
3) அத்தீவின் தொடரறாத வடக்கு கிழக்கில் அமைந்துள்ள அவர்களின் பாரம்பரிய தாயகத்திற்கான உரிமத்தை ஈழத்தமிழர்கள் தம்மகத்தே கொண்டுள்ளனர் என்பது,
4) தமிழ்த் தேசியம் தனது இறைமையை ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி அரசிடம் ஒருபோதும் கையளிக்கவில்லை, அத்துடன் 1976ம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படைகளுக்கு 1977ம் ஆண்டு இடம் பெற்ற பொதுத் தேர்தலில் ஈழத்தமிழரால் ஜனநாயக ரீதியாக அளிக்கப்பட்ட மக்களாணையின் அடிப்படையில் இறைமையும் சுதந்திரமுமுள்ள தேச-அரசில் அவர்களது இறைமை மீளநிலைநிறுத்தப்படவேண்டும் என்பதான கொள்கைக் கருத்துநிலை. எனினும், மேற்கூறிய நான்கு உபபிரிவுகளில் கூறப்பட்ட எதுவும் ஈழத்தமிழர்கள் தமது முழுமையான சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் மேற்கொள்ளும் எந்தவொரு தீர்மானத்தினையும் புறக்கணிப்பதாக அமைந்துநிற்காது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் போராளிகளும் பொது மக்களும் செய்த

அளப்பரிய அர்ப்பணிப்புகளுக்கு மதிப்பளித்துச் செயற்படல்.

**தமிழீழ நடைமுறை அரசு சாதித்துள்ள ஆக்கபூர்வமான அரசியல் நீதி, சமூக, பண்பாட்டு விழுமியங்களை அங்கீகரித்துச் செயற்படல்.**

1) சமயசார்பற்ற தன்மை,
2) தாராள ஜனநாயக பண்புடைமை,
3) வெகுசனப் பஙகேற்பூடான அரசியல்,
4) ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தன்மை,
5) முறையான சட்டவாட்சியை நிலைநிறுத்தல்,
6) பரந்த ஜனநாயகப் பண்புகளைக் கொண்டிருத்தல்,
7) ஏனைய நாடுகளில் மக்கள் அனுபவிக்கும் அனைத்து உரிமைகளுக்கும் உத்தரவாதம் அளித்தல் ஆகிய தன்மைகள் பொருந்திய தமிழீழத்தை உருவாக்குவதற்காக ஈழத்தமிழ்த் தேசியம் பாடுபடவேண்டும் என்பதை அங்கீகரித்துச் செயற்படல்.

இந்த அவையானது ஈழத்தமிழ் தேசிய, இறைமைச் சின்னங்களை ஏற்று ஊக்குவித்தல் வேண்டும்.

தமிழர் தாயகத்தில் சாதி வேறுபாடற்ற, சமயவாதமற்ற சமூகத்திற்கான உரிமைகளுக்காக குரல் கொடுப்பதுடன், சமூக அரசியல் உரிமைகளுக்கான அனைத்துலக சாசனம், பொருண்மிய பண்பாட்டு உரிமைகளுக்கான அனைத்துலக சாசனம், மற்றும் ஏனைய சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைவாக தொடரறாத வடக்கு கிழக்கு பாரம்பரிய தமிழர் தாயகத்திலும், தீவின் ஏனைய பகுதிகளிலும் உலகளாவிய மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரங்களை மேம்படுத்தல்.

ஸ்ரீலங்காவில் பிறப்பிக்கப்பட்டுள்ள மனிதவிரோத சட்டங்களை ஆதரிக்கின்ற அல்லது தமிழர்களை இராணுவத்தின் மூலம் அடக்குமுறைக்குள்ளாக்குவதை ஆதரிக்கின்ற குழுக்கள் கட்சிகள் போன்றவற்றிலிருந்து விலகிநிற்றல்.

தமிழீழத்தை அமைப்பதற்கான சகலவிதமான ஜனநாயக, வன்முறையற்ற வழிமுறை களையும் கையாளுதல்.

**மேற்குறித்த நோக்குகளுக்கும் கோட்பாடுகளுக்கும் ஏதுவாக நா.க.த.அ தனக்குத் தேவையான வளங்களை உலகளாவியுள்ள மக்களவைகளை இணைத்து வினைத்திறனோடு செயலாற்றுதல் வேண்டும்.**

**Norwegian Council of Eelam Tamils**
Postboks 15 Furuset, 1001 Oslo, Norway
Reg. No. 994 389 092